பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
30 08 2024 **FRIDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வெளியுறவுப் பணி அதிகாரிகள் நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

- வடகிழக்கு பிராந்தியத்திற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- சென்னையில் ஃபார்முலா-4 கார் பந்தயத்தை போக்குவரத்து இடையூறு இன்றி நடத்தவேண்டும் என்று மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- மாணவர்களுக்கு வழங்கும் கல்விக் கடன் திட்டத்திற்கு வங்கியாளர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அமைச்சர் திரு. மூர்த்தி கூறியுள்ளார்.

- பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் வில்வித்தை கலப்புக்குழு பிரிவில் இந்தியாவின் ஷீத்தல் தேவி – ராகேஷ்குமார் இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

வெளியுறவுப் பணி அதிகாரிகள் நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

2023ஆம் ஆண்டு தொகுப்பைச் சேர்ந்த வெளியுறவுப் பணி பயிற்சி அதிகாரிகள் புதுதில்லியில் நேற்று தம்மை சந்தித்தபோது அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் கலாச்சாரத்தை என்றும் பெருமிதத்துடனும், கண்ணியத்துடனும் வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

உலக அளவில் நமது நாடு குறித்த கண்ணோட்டம் எவ்வாறு மாறி வருகிறது என்பது குறித்து பிரதமர் விவாதித்தார்.

தற்போது உலக நாடுகளுடன் சமநிலையில் பரஸ்பரம் மரியாதை மற்றும் கண்ணியத்துடன் நம் நாடு திகழ்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிற்சி அதிகாரிகள் வெளிநாடுகளில் பணியமர்த்தப்படும் போது, இந்திய வம்சாவளியினருடன் தங்களது தொடர்புகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்கான அதிகாரமளித்தல் பயிற்சி திட்டத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டிற்கு பெருமை சேர்த்த ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று கூறினார்.

அவர்களின் அனுபவம், இளம் விளையாட்டு வீரர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அனைத்து வழிகளிலும் ஆதரவு அளிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், வடகிழக்கு பிராந்தியம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

குவஹாத்தியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு பிராந்தியங்களின் வளர்ச்சிக்கு பிரதமர் முன்னுரிமை அளிப்பதாக கூறினார்.

தமது பயணத்தின் போது தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சக நடவடிக்கைகள் குறித்து உயரதிகாரிகளுடன் திரு. எல். முருகன் ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

சென்னையில் ஃபார்முலா-4 கார் பந்தயத்தை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்தப் பந்தயத்தினால் போக்குவரத்துக்கு எந்த இடையூறும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

அப்போது பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று தமிழக அரசின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இதற்கிடையே, கார் பந்தயம் நடைபெறும் சென்னை தீவுத்திடல் மைதானத்தை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

இன்று முதல் நாளை மறுநாள் வரை இந்த போக்குவரத்து மாற்றங்கள் அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளில் மருத்துவத்துறையில் 6 ஆயிரத்து 744 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், அரசுப் பணியில் சேருபவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி, அவர்கள் விரும்பும் இடங்களில் பணிநியமனம் செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

தற்போதுள்ள 36 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 11 மருத்துவக் கல்லூரிகளில் முதல்வர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகு பொறுப்பு முதல்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரிகளுக்கான புதிய முதல்வர்களை நியமிக்கும் பணி நடைபெற்று வருவதாக திரு. மா. சுப்பிரமணியன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு உதவித்தொகையாக 15 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மாநில அரசின் சார்பில் நேற்று வழங்கப்பட்டது.

இந்தோனேஷியா மற்றும் ஜப்பானில் நடைபெறவுள்ள பாரா பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்கும் ஜெகதீஷ் டில்லி-க்கு 2 லட்சம் ரூபாய்க்கான காசோலை அளிக்கப்பட்டது.

12 வீரர்களுக்கு 9 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டது.

ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் உள்ள ஒரு மைதானத்தை மேம்படுத்திட 30 லட்சம் ரூபாய் நிதி, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து அளிக்கப்பட்டது.

மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இதனை வழங்கியதாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாணவர்களுக்கு வழங்கும் கல்விக் கடன் திட்டத்திற்கு வங்கியாளர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அமைச்சர் திரு. மூர்த்தி கூறியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற கல்விக்கடன் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பேசிய அவர், கல்வித்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி பயில்வதை உறுதி செய்யும் நோக்கில், இத்தகைய கல்விக்கடன் முகாம்கள் நடத்தப்படுவதாக திரு. மூர்த்தி கூறினார்.

>>>>><<<<<

கொல்கத்தாவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இரண்டு பாதுகாப்பு பணியாளர்களிடம் சிபிஐ உண்மை கண்டறியும் சோதனை நடத்தியது.

இதற்கிடையே, கொல்கத்தாவைச் சேர்ந்த காவல்துறை உதவி ஆய்வாளர் **Anup Dutta**–விடம் இச்சோதனையை நடத்த சிபிஐ திட்டமிட்டுள்ளது.

இதற்காக **Sealdah** நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது.

முன்னதாக, அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முன்னாள் முதல்வர் டாக்டர் **Sandip Ghosh** உட்பட 7 பேரிடம் சிபிஐ, உண்மை கண்டறியும் சோதனையை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

மத்திய வங்கக்கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், பின்னர் அது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, வடக்கு ஆந்திரா, ஒடிசா ஆகிய பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவித்தார்.

இதன் காரணமாக, இன்றும் நாளையும் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று திரு. செந்தாமரைக்கண்ணன் கூறினார்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

யுக்ரைன் - ரஷ்யா இடையேயான போரின் போது, ரஷ்யாவால் சிறைபிடிக்கப்பட்ட யுக்ரைன் நாட்டைச் சேர்ந்த குழந்தைகளை விடுவிக்க வேண்டும் என்று அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

**>>>>><<<<<**

இங்கிலாந்தின் செளதாம்டன் பல்கலைக் கழகம் இந்தியாவில் வளாகத்தை அமைப்பதற்கான ஒப்புதல் கடிதத்தை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் புதுதில்லியில் நேற்று வழங்கினார்.

**>>>>><<<<<**

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடலோர காவல்படையின் முதலாவது மாசு கட்டுப்பாட்டு கப்பலான **Samudra Pratap** கோவாவில் சேவையை தொடங்கியது.

**>>>>><<<<<**

**Y.S.R** காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர்கள் **Beedha Masthan Rao Yadav, Mopidevi Venkataramana** ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

**>>>>><<<<<**

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அருகே இலங்கை அகதிகள் மறுவாழ்வு மையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 236 வீடுகளை அமைச்சர்கள் திரு. எ.வ.வேலு, திரு. செஞ்சி மஸ்தான் ஆகியோர் திறந்து வைத்தனர்.

**>>>>><<<<<**

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கைப்பற்றப்பட்ட 265 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள், அரியலூரில் உள்ள சிமெண்ட் ஆலையின் கொதி உலையில் போட்டு அழிக்கப்பட்டது.

**>>>>><<<<<**

மயிலாடுதுறையில் மூன்று நடமாடும் கால்நடை மருத்துவ வாகன சேவையை ஆட்சியர் திரு. மஹாபாரதி தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

மதுரை மாவட்டத்தில் வரைவு வாக்குச்சாவடி பட்டியலை ஆட்சியர் திருமதி. சங்கீதா வெளியிட்டார்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலையில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடையை ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் திறந்து வைத்தார்.

>>>>><<<<<

திருப்பூர் மாவட்டம், கணியூர் பகுதியில் தேனீக்கள் கொட்டியதால் காயமடைந்த 20 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் வில்வித்தை கலப்புக்குழு பிரிவில் இந்தியாவின் ஷீத்தல் தேவி – ராகேஷ்குமார் இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற போட்டியில் இந்த இணை ஆயிரத்து 399 புள்ளிகளுடன் புதிய பாராலிம்பிக் சாதனை படைத்தது.

இன்று நடைபெறவுள்ள துப்பாக்கிச் சுடுதல் மகளிர் பிரிவில் அவனி லேக்ரா, மோனா அகர்வால் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல்சுற்றில் இந்த இணை 6-3, 7-5 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் **Robin Haase – Sander Arends** இணையை வென்றது.

இதற்கிடையே, கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் ரோஹன் போபண்ணா - இந்தோனேஷியாவின் **Aldila Sutjadi** இணை இன்று நெதர்லாந்தின் **Demi Schuurs -** ஜெர்மனியின் **Tim Puts** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கிப் போட்டி, பீகார் மாநிலம், **Rajgir** -ல் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, நவம்பர் 11ஆம் தேதி தொடங்கி, 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**>>>>><<<<<**